**கவனிக்க.-** 2008.10.03 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (IIஅ), பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1571 - 2008 ඔක්තෝබර් 10 වැනි සිකුරාදා - 2008.10.10

*1571 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1116 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1117 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, ஒற்றோபர் 17 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, ஒற்றோபர் 03 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## களுத்துறை மாவட்ட செயலகம்

பெண் வரவேற்பு உத்தியோகத்தர் பதவி

களுத்துறை மாவட்ட செயலகத்தின் பெண் வரவேற்பு உத்தியோகத்தர் பதவிக்காக உரிய தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. மாவட்டத்தினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் 2008.10.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியவாறு ''மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், களுத்துறை'' எனும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தற்போது அரச சேவையில் உள்ளவர்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்ப வேண்டும்.

1. **தொழில் விபரம்.**- களுத்துறை மாவட்ட செயலக கட்டிடத்தினுள் வரும் பொதுமக்களை நல்ல முறையில் வரவேற்றல் மற்றும் அவர்களை உரிய அதிகாரிகளிடம் அல்லது உரிய பிரிவிற்கு அனுப்புதல்.

2. **வயதெல்லை.**- வயது 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயது எல்லை அவசியமற்றது.)

3. **கல்வித் தகைமைகள்.**- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி அல்லது இலக்கண எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம்/ அடிப்படைக் கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (ஒரு தடவையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

அல்லது

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் சிங்களம்/தமிழ் மொழி கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (ஒரு தடவையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

அல்லது

தேசிய பொது கல்விச் சான்றிதழ் பரீட்சையில் முதல் மொழி, கணிதம், ஆங்கிலம் உட்பட 4 பாடங்களுக்கு ''ஏ'' அல்லது ''பி'' தர சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (ஒரு தடவையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

அல்லது

சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சரளமாக பேசக்கூடியவராக இருத்தல் வேண்டும். தமிழ் மொழி சம்பந்தமாக போதிய அறிவு இருத்தல் வேண்டும்.

4. **6/ 2006 சம்பள பிரிவும் அளவுத்திட்டமும்.**- MN 1 - ரூபா 13,120 – 10 X 145 – 11 X 170 – 10 X 240 – 10 X 320 - ரூபா 22,040 (மாதாந்தம்)

5. **சேவை நிபந்தனைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உள்ளதுமாகும். தற்போது ஓய்வூதியம் உள்ள பதவியில் உள்ளவர்கள் தொடர்ந்தும் அவ் ஓய்வூதிய முறையில் கணக்கிடப்படும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு கட்டுப்பட்டவராவார்.

6. **தேர்ந்தெடுக்கப்படும் முறை.**- நேர்முகப் பரீட்சை மூலம் தகுதியான ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

7. **விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்தல்.**- விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தை இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டு 2008.10.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியவாறு ''மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், களுத்துறை'' எனும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் வலதுபக்க மேல் மூலையில் ''பெண் வரவேற்பு உத்தியோகத்தர் பதவிக்கு ஆள் சேர்த்துக்கொள்ளப்படல்'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். காலதாமதமாகக் கிடைக்கும் அல்லது தேவையான தகுதி அற்ற அல்லது பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுதல் சம்பந்தமாக களுத்துறை மாவட்ட செயலாளரால் கடைசித் தீர்மானம் எடுக்கப்படும். இவ்விண்ணப்பப் படிவம் கிடைக்கப்பெற்றது அல்லது நிராகரிக்கப்பட்டது என அறியத்தரப்பட மாட்டாது.

எஸ். ஹப்புஆரச்சி,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
மேலதிகச் செயலாளர்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

களுத்துறை மாவட்ட செயலகம்,
2008.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## களுத்துறை மாவட்ட செயலகம்

பெண் வரவேற்பு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

1. (முதல் எழுத்துக்களுடன்) விண்ணப்பதாரியின் பெயர் :----.
2. முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
4. தற்போதைய நிரந்தர முகவரி :----.
5. நீங்கள் இலங்கை பிரசையா ? :----.
   (பிறப்பினால் அல்லது பதிவுசெய்யப்பட்டதால் என குறிப்பிடப்பட வேண்டும்.)
6. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? :----.
7. பிறந்த திகதி :

   வருடம் | | | | | மாதம் | | | திகதி | | |

8. கல்வித் தகைமைகள் :----.
9. மொழித்திறன் :----.

10. அனுபவம் :----.

என்னால் மேலே கூறப்பட்ட விபரங்கள் எனது அறிவின்படி சத்தியமானதும் மற்றும் சரியானதும் என்றும், இவ்விபரம் தவறானது என்று நான் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டபின் தெரியவந்தால் எனது சேவையை இரத்துச்செய்து கொள்வதற்கும் நான் உடன் படுகின்றேன் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10-281

---

## திருத்தம்

### பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கான்ஸ்டபிள், பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் (விசேட அதிரடிப்படை)

மேற்போந்த பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக 2007.12.28 ஆந் திகதிய 1530 ஆம் இலக்கங்கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தல் தொடர்பானது:

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியாகிய 2008.10.11 ஆந் திகதியிலிருந்து 2 மாதம் 20 நாட்களால் நீடிக்கப்பட்டு 2008.12.31 ஆந் திகதி இறுதித் திகதி என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

பொலிஸ் மா அதிபர்.

10-321/1

---

## திருத்தம்

### பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கான்ஸ்டபிள், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள், பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்

மேற்போந்த பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக 2008.04.11 ஆந் திகதிய 1545 ஆம் இலக்கங்கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தல் தொடர்பானது :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியாகிய 2008.10.11 ஆந் திகதியிலிருந்து 2 மாதம் 20 நாட்களால் நீடிக்கப்பட்டு 2008.12.31 ஆந் திகதி இறுதித் திகதி என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

பொலிஸ் மா அதிபர்.

10-321/2

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### கல்வி அமைச்சு

பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேர பாடநெறியை தொடர்வதற்காக தேர்ந்தெடுத்தல் - 2008/2009 ஆம் கல்வி ஆண்டு

2008/2009 ஆம் ஆண்டில் நடைபெறும் ஒரு வருடகால பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி (உள்வாரி) முழுநேர பாடநெறியைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுக்க விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பாடநெறி கொழும்பு, பேராதனை மற்றும் யாழ் பல்கலைக்கழகங்களில் நடைபெறும்.

3. இப்பாடநெறி சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் மூலம் நடைபெறும். இப்பாடநெறிக்காக ஒரு மொழிமூலம் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

அவ்வவ் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் மொழி மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :-

| | | |
|---|---|---|
| கொழும்புப் பல்கலைக்கழகம் | - | சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழிமூலம் |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | - | சிங்கள மொழிமூலம் |
| யாழ் பல்கலைக்கழகம் | - | தமிழ்மொழிமூலம் |

4. சகல விண்ணப்பதாரர்களும் கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும்:-

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரஜையாக இருக்க வேண்டும்.

(ii) 2008.11.10 ஆந் திகதியன்று 50 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த தேகாரோக்கியம் மற்றும் நற்பிரஜையாக இருக்க வேண்டும்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக இருக்க வேண்டும்.

(v) கீழ்க் குறிப்பிடப்பட்ட சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் நிரந்தர நியமனம் பெற்றிருக்க வேண்டும் :-

(அ) இலங்கை ஆசிரியர் சேவை (அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலை மற்றும் பிரிவெனாக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் உட்பட) ;

(ஆ) இலங்கை அதிபர் சேவை ;

(இ) இலங்கை கல்வி நிர்வாக சேவை ;

(ஈ) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை ;

(vi) பட்டத்திற்குப் பின்னர் 2008.11.10 ஆந் திகதியன்று இலக்கம் 04 (v) குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் ஒரு வருடகால சேவைக்காலத்தை பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

**குறிப்பு** :

**(1) பிரிவெனா அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலிருந்து பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் :-**

(அ) பாடநெறிக்காக விடுவிப்பதாகவும் ;
(ஆ) பாடநெறியை தொடரும் காலத்திற்குள் சம்பளம் செலுத்துவதற்கும் ;
(இ) பாடநெறியின் இறுதியில் ஆசிரியரை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதற்கும்,
(ஈ) ஆசிரியருக்குப் பதிலாக வேறு ஆசிரியர்களை கோருவதில்லை என்றும் ;
(உ) ஆசிரியரின் பணிகள் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியருக்கிடையே பகிர்ந்தளிப்பதாகவும்

பதிவாளர்/நிர்வாக சேவை முகாமையாளர்களினால் உறுதிசெய்த அறிக்கைப்படிவத்தை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(2) கற்கை விடுமுறை பெற்று பிணை முறிக்கு உட்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் 2008.11.10 ஆந் திகதிக்கு பிணை முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய சேவைக்காலத்தை பூர்த்தி செய்து அல்லது அவ்வாறின்றேல் ஐந்து (05) வருடங்கள் பூர்த்தி செய்திருப்பின் மாத்திரம் விண்ணப்பிக்க தகைமை பெறுவர்.

(3) பல்கலைக்கழகம் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியைத் தொடருபவர்கள், கல்வியியலாளர் பட்டதாரிகளுக்கும் இப்பாடநெறியைத் தொடர்வதற்காக விண்ணப்பிக்க முடியாது.

பாடநெறியைத் தொடர்வதற்காக பேராதனை பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் 2005 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பின்னர் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் "புதிய பட்டதாரிகளை திசைமுகப்படுத்தும் மூன்று மாதகால பாடநெறி" தொடர்ந்து பூர்த்தி செய்திருக்க வேண்டும்."

**5. தேர்வு முறை :**

(1) (i) சகல விண்ணப்பதாரிகளும் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளுக்கமைய நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் பாடநெறிக்காக சேர்த்துக்கொள்ளும் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கு நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படும்.

(iii) வர்த்தமானி அறிவித்தலில் 4 (v) இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரி உள்ளடங்கும் சேவைகளுக்கான பதவியின் சேவைக்காலத்திற்காக நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும். சேவைக்காலத்தின் ஒரு வருடத்திற்கு 4 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். சேவைக்காலத்திற்காக வழங்கப்படும் உயர்ந்தபட்சப் புள்ளிகளின் எண்ணிக்கை 40 ஆகும். விண்ணப்பதாரியின் சேவைக்காலம் கணிப்பீடு செய்யப்படுவது அவர் உரிய பதவியில் கடமையைப் பொறுப்பேற்ற தினம் தொடக்கம் ஆகும்.

(iv) எழுத்துமூலப்பரீட்சையின் புள்ளிகள் மற்றும் சேவைக்காலத்திற்காகக் கிடைக்கும் புள்ளிகளின் மொத்தம் இறுதிப் புள்ளிகளாகக் கருதி அப்புள்ளிகளின் தொடருக்கமைய பாடநெறிக்காக தேர்ந்தெடுக்கப்படும்.

(v) உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கையில் 1% இவர்களுக்காக ஒதுக்கப்படும்.

(vi) பாடநெறியைத் தொடர்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கை அவ்வவ் பல்கலைக்கழகத்தில் காணப்படும் இடவசதிகளுக்கமைய தீர்மானிக்கப்படும்.

*(2) எழுத்துமூலப்பரீட்சை :*

(i) *பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் தேர்ந்தெடுப்பதற்கான எழுத்துமூலப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் கொழும்பு மற்றும் யாழ் நகரங்களில் நடைபெறும் ;*

(ii) *மேற்கூறப்பட்ட 2 மத்திய நிலையங்களில் தாம் விரும்பும் மத்திய நிலையத்தில் விருப்பமான மொழி மூலம் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் பின்னர் மாற்றியமைக்கப்படமாட்டாது ;*

(iii) *பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளுக்கு உட்பட்டு பரீட்சார்த்தி செயற்பட வேண்டும் ;*

(iv) *எழுத்துமூல பரீட்சை வினாப்பத்திரம் இரண்டு பிரிவுகளாக அமையும்.-*

(அ) *பொது அறிவு.- சமகாலத் தகவல்கள், பொது அறிவு, கல்வித் தகவல்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான வினாப்பத்திரம் (01 மணித்தியாலம்).*

(ஆ) *பொது உளச்சார்வு.- மொழி அறிவு, விளக்கம், விவாதிக்கும் திறமை, புள்ளிவிவர ரீதியிலான திறமை போன்றவைகளை உள்ளடக்கியதாக இவ்வினாப்பத்திரம் அமையும். (நேரம்.- 1 1/2 மணித்தியாலம்).*

*(3) நேர்முகப்பரீட்சை :*

(i) *நேர்முகப்பரீட்சையின்போது பரீட்சார்த்தியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆவது வாசகத்திற்கமைய தாம் பாடநெறியைத் தொடர தகைமை பெற்றவர் என உறுதி செய்ய வேண்டும் ;*

(ii) *பரீட்சார்த்தியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4* (V) *இற்குரிய பதவியின்/பதவிகளின் சேவைக்காலத்தை உறுதிசெய்வதற்கு உரிய ஆவணங்களை நேர்முகப்பரீட்சைக்கு சமர்ப்பிக்க வேண்டும். விசேடமாக பதவியில் கடமையைப் பொறுப்பேற்ற தினம் நேர்முகப்பரீட்சையின்போது உறுதிசெய்யப்பட வேண்டும். இது பரீட்சார்த்திக்கு சேவைக்காலத்திற்குரிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள உதவியாக அமையும்.*

*6. விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படவேண்டிய முறை.-* (i) *வழங்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய ஏ4 அளவு கடதாசியின் இரு பக்கத்தையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டும் ;*

(ii) *கட்புலன் செவிப்புலனற்ற, ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரர்களுக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் இடதுபக்க மேல்மூலையில் சிவப்பு நிறத்தினால் கட்புலனற்ற/செவிப்புலனற்ற/ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரர்கள் எனக் குறிப்பிட வேண்டும் ;*

(iii) *பரீட்சைக் கட்டணம், பரீட்சைக் கட்டணமாக ரூபா 300 நிதியை அருகாமையில் உள்ள தபால் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக உள்ள கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும். 2008.10.10 ஆந் திகதி தொடக்கம் 2008.11.10 ஆந் திகதிவரை சகல தபால் அலுவலகங்களிலும் இப்பற்றுச்சீட்டை வழங்குவதற்காக ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பரீட்சைத் திணைக்களத்தினால் தபால் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.*

(iv) *விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல் :*

(அ) *விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) பாடநெறி எனக் குறிப்பிட வேண்டும்.*

(ஆ) *2008.11.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு சேவை, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.*

(v) *நேரசூசி மற்றும் அனுமதி அட்டை பரீட்சார்த்திகளுக்கு தபால்மூலம் அனுப்பப்படுவதுடன் தமது அனுமதி அட்டை பரீட்சை நடைபெறும் தினத்திற்கு குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னர் கிடைக்காத பட்சத்தில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு அது தொடர்பாக கீழ்க்குறிப்பிடப்பட்ட தகவல்களுடன் அனுப்ப வேண்டும்:-*

(அ) *பரீட்சையின் பெயர் ;*
(ஆ) *பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;*
(இ) *முகவரி ;*
(ஈ) *நிதி செலுத்தியதற்காக தபால் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இலக்கம் ;*
(உ) *விண்ணப்படிவம் தபாலிலிட்ட திகதி ;*
(ஊ) *விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட அலுவலகம், மற்றும் பற்றுச் சீட்டிலக்கம் ;*

(vi) எக்காரணம் கொண்டும் பரீட்சைக்கட்டணம் மீண்டும் திருப்பிச் செலுத்தவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றியமைக்கப்படவோ மாட்டாது.

(vii) முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும் ;

(viii) சகல விண்ணப்பதாரர்களும் எழுத்துமூலப்பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை செல்லுபடியாகும் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் ;

(ix) உரிய பாடநெறியைத் தொடரும் விண்ணப்பதாரர்கள் ஏதாவதொரு பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் பல்கலைக்கழகத்தை மாற்றியமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது ;

(x) தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னரேனும் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்யவில்லை என தெரியவரும் பட்சத்தில் அவ்வாறான பரீட்சார்த்திகளை தேர்ந்தெடுப்பதிலிருந்து இரத்துச்செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

7. **கற்கை விடுமுறை**.- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாடநெறியைத் தொடர்வதற்காக முழுமையான சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்கப்படும். இதற்காக இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்கள், இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்கள், தேசிய பாடசாலை, தனியார் பாடசாலை, பிரிவெனாக்களில் சேவையாற்றும் பணியாளர்களின் கற்கை விடுமுறையினை கல்வி அமைச்சின் செயலாளரினாலும் ஏனைய விண்ணப்பதாரர்களின் கற்கை விடுமுறை மாகாணக் கல்விச் செயலாளர்களினால் அங்கீகரிக்க வேண்டும்.

8. **பிணை முறி**.- பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதார்கள் பாடநெறியைத் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் குறைந்த பட்சம் 3 1/2 வருடகாலம் அவர் திணைக்களத்தில் சேவையாற்றுவதற்காக மாகாண கல்விப் பணிப்பாளர்/கல்விச் செயலாளருடன் பிணை முறியில் ஒப்பமிட வேண்டும். பயிற்சிக்காக செலவாகும் நிதி, 10,000.00 ரூபாவை தாண்டும் பட்சத்தில் பிணை முறிக்கமைய கட்டாய சேவைக்காலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை ஒழுங்கு விதிமுறைக்கமைய தீர்மானிக்கப்படும்.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யாது உரிய காலஎல்லைக்குள் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அக்கற்கை விடுமுறைக்காலத்திற்குள் அவருக்கு செலுத்தப்பட்ட முழுமையான சம்பளம் மற்றும் கொடுப்பனவை மீண்டும் திருப்பிச் செலுத்த வேண்டும்.

10. பாடநெறியைத் தொடரும் காலத்தில் மாணவர்களின் செயற்பாடுகள், பழக்கவழக்கங்கள், வரவு திருப்தியளிக்காத பட்சத்தில் அவர்கள் பாடநெறியில் இருந்து நீக்கப்படுவார்கள்.

11. வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கிலமொழி மூலமான பாடநெறிகளுக்கிடையோ ஏதாவதொரு தொடர்பின்மை தெரிய வரும் பட்சத்தில் சிங்கள மொழியே உயர்ந்து நிற்கும்.

எம். எம். என். டி. பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
''இசுருபாய'',
பெலவத்தை,
பத்திரமுல்லை,
2008,செத்தெம்பர் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேர பாடநெறியை தொடர்வதற்காக தேர்ந்தெடுத்தல் - 2008/2009 ஆம் கல்வி ஆண்டு**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

| பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் பல்கலைக்கழகம் (கொழும்பு/பேராதனை/யாழ்ப்பாணம்) | விண்ணப்பிக்கும்மொழி (சிங்களம்/தமிழ்) | விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் (கொழும்பு/யாழ்ப்பாணம்) |
|---|---|---|
| | | |

1. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) (சொந்தப் பெயர் முதலில்) : திரு./ திருமதி/ செல்வி:-----.
(உ-ம் : Mr. SILVA, A. B.) :----.
(ii) முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2. (i) அலுவலக முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

(ii) சொந்த முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

(iii) சேவையாற்றும் பாடசாலை/நிறுவகத்தின் அமைவிடம் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

| மாகாணம் | மாவட்டம் | வலயம் |
|---|---|---|
| | | |

(iv) நிறுவனத்தின் தன்மை (அரச பாடசாலை/தனியார் பாடசாலை/பிரிவெனா/ஏனையவை) :----.

3. (i) பிறந்த திகதி :

ஆண்டு:-----. மாதம்:----. திகதி :----.

(ii) 2008.11.10 ஆந் திகதி வயது :-
வருடங்கள்: :-----. மாதங்கள் :----. நாட்கள்:----.

4. பட்டம் தொடர்பான விவரம்:-

| பட்டம் | பல்கலைக் கழக பாடநெறியைத் தொடரும் காலம் (தினம் - தினம் வரை) | பட்டம் பெற்ற ஆண்டு | பட்டம் செல்லுபடியாகும் தினம் | பட்டத்திற்கான பாடங்கள் | சித்தியின் தரம் | நிறுவகம்/ பல்கலைக் கழகம் | பட்டம் (உள்வாரி/ வெளிவாரி) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

5. (i) முதலாவது நியமனத்தின் பதவி.................... முதலாவது நியமனத் திகதி :----.

(ii) வர்த்தமானி அறிவித்தலின் 4 (v) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு நியமனம் பெற்ற திகதி:----.

(iii) அப்பதவியில் கடமையைப் பொறுப்பேற்ற திகதி :----.

(iv) பட்டத்திற்குப் பின்னர் ஆசிரியர் சேவையின்/அதிபர் சேவையின்/கல்வி நிர்வாக சேவையின்/ஆசிரிய கல்விச் சேவையின் பதவிக்கு 2008.11.10 ஆந் திகதியன்று சேவைக்காலம் :----.

6. (i) தொழிற்பயிற்சி தொடர்பான விவரம்:----.

| பாடநெறியைத்தொடரும் நிறுவகம் (ஆசிரிய கலாசாலை/தேசிய கல்விக் கல்லூரி/ஏனையவை) | பாடநெறி (பாடத்துறை) | நிறுவனத்தில் பாடநெறியைத் தொடர்ந்த கால எல்லை | |
|---|---|---|---|
| | | திகதி தொடக்கம் | திகதி வரை |
| | | | |

(ii) தாங்கள் புதிய பட்டதாரி ஆசிரியர்களை திசைமுகப்படுத்தும் பாடநெறியைத் தொடர்ந்துள்ளீரா?
(இது 2005 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாத்திரம் ஆகும்)

7. பெற்றுக்கொண்ட கற்கை விடுமுறை தொடர்பான விவரங்கள் :

| விடுமுறை பெற்றதற்கான காரணம் | முறிக்காலம்<br>............. திகதி தொடக்கம்<br>............. திகதி வரை | முறியை பூரணப்படுத்த எஞ்சியுள்ள காலம் |
|---|---|---|
| | | |

குறிப்பு.- தேசிய கல்விக் கல்லூரி ஒன்றில் தேசிய போதனாவியல் டிப்ளோமாப் பாடநெறியைத் தொடரும் காலஎல்லை கற்கை விடுமுறையாகக் கருதப்படமாட்டாது.

8. விண்ணப்பதாரருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் உள்ளனவா? அவ்வாறிருப்பின் அது தொடர்பான தகவல்கள் (ஆம்/இல்லை : .....................)
ஆம் எனின் எதற்காக)........................

9.

| | |
|---|---|
| தபால் அலுவலகத்திற்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். | ................... ஆந் திகதிய பற்றுச்சீட்டு இலக்கம்............. இன் கீழ் ................ தபால்/உபதபால் அலுவலகத்திற்கு ரூபா................ (எழுத்தில்) செலுத்தப்பட்டதனை உறுதி செய்கிறேன். |

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானதும் உண்மையானதும் என்றும் 2008.10.10 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆவது வாசகத்திற்கமைய எனக்கு இப்பாடநெறியைத் தொடர்வதற்காக தகைமை உள்ளது என்றும் பரீட்சை சட்டக் கோவையின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்குவதாகவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி செல்லுபடியாகும் பற்றுச்சீட்டை இணைத்துள்ளதாகவும் இத்தால் உறுதிசெய்கிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. **பாடநெறிக்காக நிறுவனத்திலிருந்து விடுவிப்பதற்கான பரிந்துரை** (அதிபர், பீடாதிபதி, பதிவாளர், நிர்வாக சபை முகாமையாளர் அல்லது திணைக்களப்பொறுப்பாளர்) :

மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட விண்ணப்பதாரரின் பாடநெறியைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் தொழிற்பயிற்சிப் பாடநெறியை தொடரும் தேவையை கருத்திற்கொண்டு இவ்விண்ணப்பதாரரை விடுவிக்கின்றேன்./ விடுவிக்கவில்லை.

----,
அதிபர்/நிறுவனப் பொறுப்பாளரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

10-351

**கல்வி அமைச்சு**

ஆசிரிய கல்வி தொடர்பான ஆரம்ப சேவை தொழில் பாடநெறியை தொடர்வதற்காக தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ளல் - 2009

1.0 தேசிய கல்விக் கல்லூரியில் ஆசிரிய கல்வி தொடர்பான மூன்றாண்டு ஆரம்ப சேவை தொழில் பாடநெறியைத் தொடர்வதற்குத் தேவைப்படும் கல்வித் தகைமைகள் மற்றும் திறமை கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகைமை.**- சகல விண்ணப்பதாரர்களும்-

2.1 இலங்கைப் பிரஜைகளாக இருக்க வேண்டும்.

2.2 சிறந்த நல்லொழுக்கம் மற்றும் தேகாரோக்கியம் கொண்டவராக இருக்க வேண்டும்.

2.3 வயது:

2.3.1 2009.01.01 ஆந் திகதியன்று 25 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

2.4 திருமணமாகாதவர்களாக இருக்க வேண்டும்.

3. **அடிப்படைக் கல்வித் தகைமைகள் :**

3.1 2007 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 03 பாடங்களில் (சிறிபாத தேசிய கல்விக் கல்லூரிக்காக 02 பாடங்கள்) ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(தொழில்நுட்ப கற்கைப் பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் 4.6 வாசகத்தில் உள்ள கவனத்தில் கொள்ள வேண்டுமென்ற பகுதியை வாசிக்கவும்).

3.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், சிங்களம்/தமிழ் மொழி உட்பட 06 கட்டாயப் பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் 03 திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருக்க வேண்டும். (முதலாவது சந்தர்ப்பத்தில் குறைந்தபட்சம் 05 கட்டாய பாடங்களிலேனும் சித்தியடைந்திருக்க வேண்டும்.)

3.3 அவ்வவ் பாடநெறிகளுக்குரிய க. பொ. த. (சா. த.) பரீட்சையில் விசேட தகைமைகள் மேற்கூறப்பட்ட 3.2 இற்குரியவாறு 02 தடவைகளில் பூர்த்திசெய்யப்படாதிருப்பின் மூன்றாவது தடவையில் பூர்த்திசெய்திருக்க வேண்டும். விசேட தகைமை எனக் கருதப்படுவது 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைத் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் ஆகும். விசேட தகைமைகள் தொடர்பாக விசேடமாகக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பத்தில் 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கருத்திற்கொள்ளப்படும்.

3.4 ஆங்கில மொழிப் பாடநெறி மற்றும் ஆங்கில மொழிமூலப் பாடநெறிக்காக ஆங்கில மொழித் தேர்ச்சி :

3.4.1 ஆங்கில மொழி பாடநெறியைத் தவிர ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும் ஏனைய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்திற்கு திறமைச் சித்தி/ஆங்கில இலக்கிய பாடத்திற்கு சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும்.

3.4.2 ஆங்கிலப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு அதிவிசேட திறமைச்சித்தி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும். (க. பொ. த. (உ. த.) ஆங்கில மொழியில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச்சித்தி/ ஆங்கில இலக்கியத்திற்கு சாதாரண சித்திபெற்றிருப்பது போதுமானது. இது எவ்வாறாக இருப்பினும் தகைமைப் பரீட்சையில் சம 'Z' புள்ளியைப் பெற்றுள்ள ஒருசில விண்ணப்பதாரர்களுக்கிடையே ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்போது ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி/அதிவிசேட சித்தி, ஆங்கில இலக்கியத்திற்கு விசேட சித்தி/அதிவிசேட சித்தி/திறமைச் சித்தி பெற்றுள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3.4.3 மேற்கத்தேய சங்கீதம் மற்றும் தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகள் ஆங்கில மொழி மூலம் நடத்தப்பட்ட போதிலும் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் காணப்படும் வெற்றிட எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு சிங்களம் மற்றும் தமிழ்மொழி மூலம் க. பொ. த. (உ. த.) தோற்றிய மாணவர்களிடமிருந்து சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

3.5 சகல தகைமைகளும் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினமன்று அல்லது அதற்கு முதல் பூரணப்படுத்த வேண்டும்.

**4. கல்வித் தகைமை மற்றும் விசேட தேவைகள்**.- தேசிய கல்விக் கல்லூரிகளில் நடாத்தப்படும் அவ்வவ் பாடநெறிகளுக்குரிய கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய விசேட தேவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

*4.1 பாடநெறி இலக்கம் 1 – ஆங்கிலம் :*

*4.1.1 2007 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழி (பொது ஆங்கிலம் அல்லாது) உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலமொழிக்கு திறமைச்சித்தி/ஆங்கில இலக்கிய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) கட்டாய பாடங்களில் க.பொ.த. (சா.தர) பரீட்சையில்/இலண்டன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்*

*அல்லது*

*4.1.2 2007 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதாவது 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் 2007 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இலண்டன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கிலம் உட்பட 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில்/இலண்டன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச்சித்தி/ஆங்கில இலக்கியப் பாடத்திற்கு சாதாரண சித்தியும் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

*அல்லது*

*4.1.3 2007 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எவையேனும் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் க. பொ. த. (சா. த.) தரப் பரீட்சையில் ஆங்கில மொழிக்கு அதி திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியப் பாடத்திற்கு திறமைச் சித்தி மற்றும் சிங்கள/தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

**குறிப்பு :**

(i) *ஆங்கிலப் பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கும்போது 4.1.1 மற்றும் 4.1.2 இன்கீழ் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை உரித்தாகிறது. இவர்கள் திறமைப் பரீட்சைக்கு தோற்றவேண்டியது அவசியமில்லை. நேர்முகப் பரீட்சையின்போது தகைமைகளை உறுதிசெய்ய வேண்டும்.*

(ii) *4.1.3 இன்கீழ் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.*

*4.2 பாடநெறி இலக்கம் 02 – விஞ்ஞானம் (தமிழ்) :*

*4.2.1 2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தாவரவியல், விலங்கியல், பௌதிகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்களில் மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசியக் கல்விக் கல்லூரிக்காக இரண்டு பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்*

*மற்றும்*

*4.2.2 தமிழ் மொழிக்கு திறமைச்சித்தி மற்றும் கணிதம் 32 அல்லது கணிதம் 42 பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் 06 கட்டாயப் பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்*

*4.3 பாடநெறி இலக்கம் 03 – கணிதம் (தமிழ்) :*

*4.3.1 2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதம், இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களுள் 03 பாடங்களில் (ஸ்ரீபாத தேசியக் கல்விக் கல்லூரிக்காக கணிதப் பாடவிதானத்தில் கணிதம், இணைந்த கணிதம், உயர் கணிதம் ஆகிய பாடங்களில் மேற்கூறப்பட்ட இரண்டு பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்.*

*மற்றும்*

*4.3.2 தமிழ் மொழிக்கு திறமைச் சித்தி மற்றும் விஞ்ஞானம் 34 பாடத்திற்கு திறமைச்சித்தி உட்பட 06 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*4.4 பாடநெறி இலக்கம் 04 – உடற்கல்வி (சிங்களம்) :*
*04 – உடற்கல்வி (தமிழ்) :*

*4.4.1 2007 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எவையேனும் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்*

*மற்றும்*

4.4.2 சிங்களம்/தமிழ் மொழி, சுகாதாரம், உடற்கல்வி, கணிதம் உட்பட 06 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

4.4.3 அங்கீகரிக்கப்பட்ட மெய்வல்லுனர் போட்டி ஒழுங்கமைக்கப்பட்ட போட்டி தொடர்பான நிபுணத்துவம்/திறமைகளைப் பெற்றிருத்தல். பல்வகைப்பட்ட விளையாட்டுக்கள்/நிகழ்ச்சிகளில் உயர்ந்தபட்சம் 03 நிகழ்ச்சிகளில் 75 புள்ளிகள் கீழ்க்குறிப்பிடப்பட்ட தொடருக்கமைய வழங்கப்படும்.

**விளையாட்டு மற்றும் நிகழ்ச்சிகளின் முன்னுரிமைத் தொடர்**

| தொடர் இல. | மட்டம்/விடயம் | தனிப்பட்ட | கூட்டாக | இடம்/ தரம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | சர்வதேச மட்டம் | தனிப்பட்ட | - | 1 | 25 |
| 2 | சர்வதேச மட்டம் | தனிப்பட்ட | - | 2 | 24 |
| 3 | சர்வதேச மட்டம் | தனிப்பட்ட | - | 3 | 23 |
| 4 | சர்வதேச மட்டம் | - | குழு | 1 | 22 |
| 5 | சர்வதேச மட்டம் | - | குழு | 2 | 21 |
| 6 | சர்வதேச மட்டம் | - | குழு | 3 | 20 |
| 7 | சர்வதேச பிரதிநிதித்துவம் | தனிப்பட்ட | குழு | - | 19 |
| 8 | தேசிய மட்டம் | தனிப்பட்ட | - | 1 | 18 |
| 9 | தேசிய மட்டம் | தனிப்பட்ட | - | 2 | 17 |
| 10 | தேசிய மட்டம் | தனிப்பட்ட | - | 3 | 16 |
| 11 | தேசிய மட்டம் | - | குழு | 1 | 15 |
| 12 | தேசிய மட்டம் | - | குழு | 2 | 14 |
| 13 | தேசிய மட்டம் | - | குழு | 3 | 13 |
| 14 | மாகாண மட்டம் | தனிப்பட்ட | - | 1 | 12 |
| 15 | மாகாண மட்டம் | தனிப்பட்ட | - | 2 | 11 |
| 16 | மாகாண மட்டம் | தனிப்பட்ட | - | 3 | 10 |
| 17 | மாகாண மட்டம் | - | குழு | 1 | 9 |
| 18 | மாகாண மட்டம் | - | குழு | 2 | 8 |
| 19 | மாகாண மட்டம் | - | குழு | 3 | 7 |
| 20 | ரெஜிமன்ட் உத்தியோகத்தர் மேஜர்/ அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் 01 | - | - | - | 6 |
| 21 | சனாதிபதி சாரணர் | - | - | - | 6 |
| 22 | சார்ஜன்ட்/மேஜர்/அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் 02 | - | - | - | 5 |
| 23 | மாவட்ட மட்டம்/வலயம்/பி. செ. அலுவலகம் | தனிப்பட்ட | - | 1 | 6 |
| 24 | மாவட்ட மட்டம்/வலயம்/பி. செ. அலுவலகம் | தனிப்பட்ட | - | 2 | 5 |
| 25 | மாவட்ட மட்டம்/வலயம்/பி. செ. அலுவலகம் | தனிப்பட்ட | - | 3 | 4 |
| 26 | மாவட்ட மட்டம்/வலயம்/பி. செ. அலுவலகம் | - | குழு | 1 | 3 |
| 27 | மாவட்ட மட்டம்/வலயம்/பி. செ. அலுவலகம் | - | குழு | 2 | 2 |
| 28 | மாவட்ட மட்டம்/வலயம்/பி. செ. அலுவலகம் | - | குழு | 3 | 1 |

4.4.4 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சுகாதார மற்றும் உடற்கல்விப் பாடத்திற்கு அவர்கள் பெற்றுள்ள சித்திக்கு அமைய மேலதிக புள்ளிகள் உரித்தாகிறது :

A சித்தி - 05
B சித்தி - 03
C சித்தி - 02

**கவனத்திற்கொள்ளவும் :**

(i) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் (சர்வதேச) கல்வி அமைச்சு/விளையாட்டு அமைச்சு மற்றும் அவற்றில் பதிவுசெய்துள்ள தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் (செஸ், கரம், டாம் தவிர) இலங்கையின் தேசிய அணி அல்லது பாடசாலையின் தேசிய விளையாட்டு அணியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்கும் சர்வதேச போட்டி (பாடசாலை விளையாட்டுக் குழு தனிப்பட்ட ரீதியில் பங்கேற்கும் சர்வதேசப் போட்டிகள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி – கல்வி அமைச்சு/விளையாட்டு அமைச்சு தேசிய இளைஞர் சேவை மன்றத்தினூடாக ஒழுங்குசெய்யப்படும் தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டி

மாகாண கல்வி அமைச்சு/மாகாண விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்படும் மாகாண மட்டத்திலான விளையாட்டுப் போட்டி

மாகாண விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்படும் மாவட்ட மட்டத்தினாலான விளையாட்டுப் போட்டி மாகாண கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படும் வலய மட்டத்திலான விளையாட்டு போட்டி.

(iii) விளையாட்டு அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுச் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஏ தரத்திலான போட்டிகள் 1, 2 மற்றும் 3 ஆவது இடங்களுக்கு மாத்திரம் தொடருக்கமைய முன்னுரிமை வழங்கப்படும்.

(iv) விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்திற்கு அண்மித்த 05 வருடங்களுக்குள் பெற்றுக்கொண்ட விளையாட்டுத் திறன்/திறமை இதற்கு செல்லுபடியாகும்.

(v) மூன்று விளையாட்டுச் சான்றிதழ்களுக்கு புள்ளி வழங்கும்போது புள்ளிகள் கிடைக்கப்பெறுவது ஒரே நிகழ்ச்சிக்கு ஒரே ஆண்டில் பெற்றுக்கொண்ட சான்றிதழ்களில் உயர் திறமையுடைய ஒரு சான்றிதழுக்கு மாத்திரமாகும்.

4.5 பாடநெறி இலக்கம் 05 – விசேட கல்வி :

4.5.1 2007 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட க.பொ.த.(உ.த.) பரீட்சையில் ஏதாவது மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

4.5.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் உட்பட (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

4.6 பாடநெறி இலக்கம் 06 – தொழில்நுட்பக் கற்கை :

4.6.1 2007 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

4.6.2 க. பொ. த. (சா. த.) சித்தி :

4.6.2.1 நிர்மாண ஆக்கம் மற்றும் தொழில்நுட்பவியல்.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ்மொழி, மரவேலை/மேசன் வேலை/நிர்மாணத் தொழில்நுட்பம், உலோக வேலை/மோட்டார் தொழில்நுட்பக் கலை/இயந்திரத் தொழில்நுட்பம், வானொலி தொழில்நுட்பம்/மின்சார இலத்திரனியல்/ தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஒன்று உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

4.6.2.2 சிற்ப கலை.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழியும், பின்னுதல், மட்பாண்டக் கலை, கலைத்திறன் ஆகிய பாடங்களில் ஒன்று உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

4.6.3 அரச அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி/தேசிய பயிலுனர் சபை/தொழிற்பயிற்சி அதிகாரசபை/கைத்தறி உற்பத்தித் திணைக்களம்/சிறு கைத்தொழில் திணைக்களம் ஆகிய நிறுவனங்களில் காணப்படும் பாட அடைவு மட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையான சான்றிதழ்கள் வழங்கப்படுவது 10 மாதங்களைவிடக் குறையாத பாடத்துறைக்குரிய கலை ரீதியான பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

**குறிப்பு** :

(i) தேர்ந்தெடுப்பதற்கான முன்னுரிமைத் தொடர் :

(அ) 4.6.1, 4.6.2, 4.6.3 சான்றிதழ்பெற்ற விண்ணப்பதாரர்
(ஆ) 4.6.1 மற்றும் 4.6.3 சான்றிதழ்பெற்ற விண்ணப்பதாரர்
(இ) 4.6.1 மற்றும் 4.6.2 சான்றிதழ்பெற்ற விண்ணப்பதாரர்

இது எவ்வாறாக இருப்பினும் மேற்கூறப்பட்ட (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் போதியளவு இல்லாத பட்சத்தில் 2006 மற்றும் 2005 ஆகிய

ஆண்டுகளில் க. பொ. த. (உ. த.) சித்தியடைந்து அத்தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பப்படிவங்களைக் கருத்திற்கொண்டதன் பின்னர் (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கொண்ட விண்ணப்பதாரர்கள் கருத்திற்கொள்ளப்படுவர்.

(ii) விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் மற்றும் தொழில்நுட்பவியல்/கலை போன்றன தொடர்பாக தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவத்தைக் கோரும் இறுதித் தினமன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிடப்பட்ட சகல தேவைகளையும் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது மேற்கூறப்பட்ட (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள (அ), (ஆ) மற்றும் (இ) முன்னுரிமைத் தொடரின் எதன்கீழ் என விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 13 இன்கீழ் "பாடநெறியின் பெயரைக் கூட்டினுள் குறிப்பிடுக"

4.7 பாடநெறி இலக்கம் - 7 மேற்கத்தேய சங்கீதம் :

4.7.1 2007 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீதம் உட்பட 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியப் பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் உட்பட கட்டாயமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

4.7.2 2007 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எவையேனும் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியத்திற்கு சாதாரண சித்தியுடன் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் உட்பட ஆறு (06) கட்டாயப் பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

கல்விக் கல்லூரிகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மேற்கத்தேய சங்கீதம் தொடர்பாக 5 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் (எழுத்துப் பரீட்சை/பிரயோக)

அல்லது

க. பொ. த. (உ. த.) மேற்கத்தேய சங்கீதப் பாடத்திற்கு மேலதிகமான பாடமாக சித்தியடைந்திருத்தல்

**குறிப்பு** :

(i) மேற்கத்தேய சங்கீதப் பாடநெறிக்காக நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையில் திருப்திகரமான திறமை மட்டத்தை எட்டுதல்

(ii) இப்பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கும்போது மேற்கூறப்பட்ட 4.7.1 இன்கீழ் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4.8 பாடநெறி இலக்கம் 8 – தகவல் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் :

4.8.1 2007 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எவையேனும் 03 பாடங்களில் (ஸ்ரீபாத கல்விக் கல்லூரிக்காக 02 பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்

மற்றும்

4.8.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்குத் திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியப் பாடத்திற்கு சாதாரண சித்தி மற்றும் கணிதத்திற்கு திறமைச்சித்தியுடன் சிங்களம்/தமிழ்மொழி உட்பட ஆறு (06) கட்டாயப் பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**குறிப்பு** : (இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தேர்வுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.)

*4.9 பாடநெறி இலக்கம் 9 - இரண்டாம் மொழி (சிங்களம்) :*

*4.9.1 இரண்டாம் மொழி சிங்கள மொழிக்கு விண்ணப்பிப்பவர்கள் 2007 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்கள மொழியில் திறமைச் சித்தியுடன் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்*

*மற்றும்*

*4.9.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி, கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்*

***குறிப்பு**.- (இந்தப் பாடநெறிக்கு தெரிவுசெய்கையில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழி தமிழ் அல்லது விருப்பத்திற்குரிய தமிழ் மொழி அல்லது அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மொழியில் உயர் பாடநெறியில் சித்தியடைந்த மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இடம்பெறும்.)*

*4.10* ***பாடநெறி இலக்கம் 10 - இரண்டாம் மொழி (தமிழ்)*** :

*4.10.1 இரண்டாம் மொழி (தமிழ்) மொழிக்கு விண்ணப்பிப்பவர்கள் 2007 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்*

*மற்றும்*

*4.10.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் மொழி, கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்*

***குறிப்பு**.- (இந்தப் பாடநெறிக்கு தெரிவுசெய்கையில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்களம் அல்லது விருப்பத்திற்குரிய சிங்களம் அல்லது அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மொழி சிங்களம் உயர் பாடநெறியில் சித்தியடைந்த மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.)*

*4.11 பாடநெறி இலக்கம் 11 – பிரெஞ்சு மொழி :*

*4.11.1 2007 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பிரெஞ்சு மொழி உட்பட 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்*

*மற்றும்*

*4.11.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம் உள்ளிட்ட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்*

**குறிப்பு** :

(i) *மேற்கத்தேய சங்கீதம் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் ஆகியன ஆங்கில மொழி மூலம் மாத்திரம் நடைபெறும்.*

5. **2009 ஆம் ஆண்டிற்காக போதனாவியலாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான ஒழுங்குமுறைகள்** :

*5.1 தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை :*

*5.1.1 2012 ஆம் ஆண்டில் பாடசாலை முறைமைக்கு அமைவான ஆசிரியர் தேவையை அடிப்படையாகக் கொண்டு சேர்த்துக்கொள்ளப்படும் போதனாவியலாளர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.*

*5.1.2 சேர்த்துக்கொள்வதற்கான அடிப்படை 'Z' புள்ளி தகைமையாகும். ஆங்கிலம்/தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பம்/ உடற்கல்வி ஆகிய பாடநெறிகளுக்கு திறமைப் பரீட்சை/விளையாட்டு தகைமைக்கமைய தேர்ந்தெடுக்கப்படும். திறமை/ விளையாட்டுத் திறமை ஒரே புள்ளியில் பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் 'Z' புள்ளி திறமை கருத்திற்கொள்ளப்படும். ஸ்ரீபாத தேசியக் கல்விக் கல்லூரியைத் தவிர ஏனைய சகல கல்விக் கல்லூரிகளிலும் நடாத்தப்படும் பாடநெறிக்காக தேசிய மட்டத்தில் 30% உம் கஷ்டப் பிரதேச மட்டத்தில் 70% உம் தேர்ந்தெடுக்கப்படும்.*

*5.1.3 மேற்கத்தேய சங்கீதம் மற்றும் தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளை ஆங்கில மொழி மூலம் கற்க விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு ஆங்கில மொழிக்கு திறமைச்சித்தி/ஆங்கில இலக்கியப் பாடத்திற்கு சாதாரண சித்தியும் ஆங்கிலப் பாடநெறியைத் தொடர விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு அதிதிறமைச் சித்தி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியுடன் சிங்களம்/தமிழ்மொழி மற்றும் கணிதம் உட்பட 06 கட்டாயப் பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைவது அவசியமாகும்.*

*5.1.4 உடற்கல்வி மற்றும் மேற்கத்தேய சங்கீதப் பாடநெறிக்காக நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையில் தகைமை தொடர்பாக திருப்திகரமான தகைமை மட்டத்தை அடைய வேண்டும்.*

5.2 கஷ்ட மாவட்ட அடிப்படை :

5.2.1 கஷ்ட மாவட்டத்திற்காக சேர்த்துக்கொள்ளப்படுவது கல்வி வசதிகளை பகிர்ந்தளிக்கும் அடிப்படையில் கஷ்டம் எனக் கருத்திற்கொள்ளப்படும் 17 மாவட்டங்களுக்குரிய விண்ணப்பதாரர்கள் மூலமாகும்.

(மாத்தளை, முல்லைத்தீவு, அநுராதபுரம், நுவரெலியா, வவுனியா, பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, பதுளை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மொனராகலை, கிளிநொச்சி, அம்பாறை, இரத்தினபுரி, மன்னார், புத்தளம்)

அவ்வவ் மாவட்டங்களில் அவ்வவ் மொழி மூலம் 2007 க.பொ.த.(உ.த.) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக்கை விகிதாசாரத்திற்கமைய சகல பாடநெறிக்கும் அவ்வவ் மாவட்டங்களில் சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

5.2.2 அவ்வவ் கஷ்ட மாவட்டங்களுக்காக போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில் வேறு கஷ்ட மாவட்டங்களிலிருந்து வெற்றிடம் நிரப்பப்படும்.

5.2.3 மாவட்டத்தைத் தீர்மானித்தல் :

5.2.3.1 ஏதாவதொரு பாடசாலை பரீட்சார்த்தியின் மாவட்டமாக அமைவது முதலாவது தடவையில் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்றிய மாதத்திற்கு முன்னைய மாதம் வரை 05 வருடங்கள் அல்லது கூடுதலான காலம் (2 1/2 வருடங்களுக்கு மேற்பட்ட) அவர் கற்ற பாடசாலை/பாடசாலை அமைந்துள்ள மாவட்டமாகும்.

5.2.3.2 ஏதாவதொரு பரீட்சார்த்தி இதற்கு முன்னர் பாடசாலை பரீட்சார்த்தியாக முதற்தடவையாக க.பொ.த. (உ.த.) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலையை விட்டுச் சென்ற சந்தர்ப்பத்தில் அப்பரீட்சார்த்தியின் மாவட்டம் முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டமாகும்.

5.2.3.3 ஏதாவதொரு தனிப்பட்ட பரீட்சார்த்தி ஏதாவதொரு முறையில் பாடசாலை அபேட்சகராக க. பொ. த. (உ. த.) பரீட்சைக்கு முன்னர் தோற்றிய பாடசாலையை விட்டுச் சென்றுள்ள சந்தர்ப்பத்தில் அதன் பரீட்சார்த்தியின் மாவட்டமாக அமைவது க.பொ.த.(உ.த.) பரீட்சைக்கு முதற்தடவையாகத் தோற்றிய முன்னரான மாதத்தின் இறுதித் தினம் வரையுள்ள 05 வருடத்திற்கு மேற்பட்ட காலம் (2 1/2 வருடத்திற்கு மேற்பட்ட காலம்) கல்வி கற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டமாகும்.

5.2.3.4 பாடசாலையில் கல்வி கற்காத தனிப்பட்ட பரீட்சார்த்தியாக இருப்பின் கிராமசேவை உத்தியோகத்தர் அல்லது பிரதேச செயலாளரின் சத்தியக் கடதாசி அல்லது தேர்தல் திணைக்களத்தின் வாக்காளர் பெயர்ப்பட்டியல் மூலம் மாத்திரம் மேற்கூறப்பட்ட மாவட்டத்தின் வசிப்பிடத்தை உறுதிசெய்ய வேண்டும்.

5.3 ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுத்தல் :

5.3.1 வெற்றிட எண்ணிக்கையில் 75% இந்திய வம்சாவளி விண்ணப்பதாரர்களும் 25% சிங்கள மொழி மூல விண்ணப்பதாரர்கள் மூலம் நிரப்பப்படும்.

5.3.2 தமிழ் மொழி மூல பாடநெறிக்காக 75% உம் சிங்கள மொழி மூல பாடநெறிக்காக 25% உம் தேர்ந்தெடுக்கப்படும்.

5.3.3 இரண்டாம் மொழி (சிங்களம்) சிங்கள மொழி மூலமும் கணிதம், விஞ்ஞானம் மற்றும் இரண்டாம் மொழி (தமிழ்) ஆகிய பாடநெறிகள் தமிழ் மொழி மூலமும் நடைபெறும்.

5.3.4 ஸ்ரீபாத தேசியக் கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பிக்க வேண்டியது நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, காலி மற்றும் குருநாகல் ஆகிய பெருந்தோட்ட மாவட்டங்களில் வதியும் பிள்ளைகள் மாத்திரம் ஆகும்.

5.3.5 தேர்ந்தெடுக்கும்போது மேற்கூறப்பட்ட பெருந்தோட்ட மாவட்டங்கள் 11 இல் தோட்டத் துறையில் வதியும் தோட்டத் தொழிலாளர்களின் சிறார்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அரச மற்றும் பதிவுசெய்யப்பட்ட தனியார் தோட்ட கம்பனிகளின் ஊழியர்களின் பிள்ளைகள் என உறுதிசெய்வதற்காக தோட்டப் பொறுப்பாளரின் கடிதம் (ஊழியர் சேவையாற்றிய கால எல்லையுடன்) 05 வருடங்கள் அல்லது அதனைவிட அதிகரித்த காலம் தோட்டங்களில் நிரந்தரமாக வதியக்கூடியவர் என தோட்ட அதிகாரியினால் உறுதிசெய்யப்பட்ட கடிதம் பயிற்சிக்குப் பின்னர் தோட்டப் பிரிவின் பாடசாலைகளில் தொடர்ச்சியாக 10 வருடங்கள் கட்டாய சேவையாற்றுவதாக உறுதியளிக்கும் கடிதம் மற்றும் ஊழியர் நலன்புரி நிலையத்திற்கு அறவிடுவதற்காக பதிவு இலக்கத்துடன் உறுதிசெய்யக்கூடிய ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மாவட்டத்தை தீர்மானிக்கும் அடிப்படையை குறிப்பிடும் 5.2.2 வாசகத்தின் ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுக்கும்போது உரியதாக்கிக்கொள்ளப்படும்.

5.3.6 மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரர்கள் போதியளவு எண்ணிக்கை இல்லாத பட்சத்தில் தோட்டப் பிரதேசத்தில் சேவையாற்றாத முன்னர் தோட்டப் பிரதேசத்தில் சேவையாற்றிய தற்பொழுது தோட்டங்களுக்குப் புறம்பாக வதியும் விண்ணப்பதாரர்கள் கருத்திற்கொள்ளப்படும்.

5.3.7 மேற்கூறப்பட்ட 5.3.6 இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை தேர்ந்தெடுக்க முடியாத பட்சத்தில் எஞ்சியுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படுவது சிங்கள மொழி மூலம் ஏனைய பாடநெறிகளுக்கு தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை மூலமாகும்.

5.3.8 உரிய சகல மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் ஒரு விண்ணப்பதாரியேனும் தேர்ந்தெடுக்க கருத்திற்கொள்ளப்படும்.

**குறிப்பு**.- சிங்கள மொழி மூலம் கல்வி கற்கும் இந்திய வம்சாவளி விண்ணப்பதாரர்கள் இருப்பின் இந்திய வம்சாவளிக்குரிய விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும். அத்துடன் தமிழ்மொழி மூலம் கல்வி கற்கும் சிங்கள விண்ணப்பதாரர்கள் சிங்கள மொழி மூல விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும்.

**6. தேர்ந்தெடுப்பதற்கான ஏனைய விடயங்கள் :**

6.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் உரிய பாடநெறிக்கான தகைமைகளை உறுதிசெய்வதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சிகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு சமர்ப்பிக்கத் தயாராக இருக்க வேண்டும். வெற்றிட எண்ணிக்கையைவிட அதிகமான எண்ணிக்கை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்.

6.2 சகல சான்றிதழ்களினதும் முதற்பிரதிகளை நேர்முகப் பரீட்சைத் தினத்திற்கு சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள்.

6.3 பாடநெறி மூலம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைந்துகொள்ள விண்ணப்பதாரர்களுக்கு இருக்கவேண்டிய உடல் உள பொருத்தப்பாடுகள் தொடர்பாக சிக்கலான நிலைமை காணப்படும் பட்சத்தில் அந்நிலைமை தொடர்பாக நேர்முகப் பரீட்சைச் சபை திருப்தியடையாத பட்சத்தில் விசேட நேர்முகப் பரீட்சைச் சபைக்கு உட்படுத்தி அதன் அறிக்கையை கல்வியியல் கல்லூரி சபைக்கு சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளும் தீர்மானம் அமுல்படுத்தப்படும்.

6.4 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் உரிய தேசிய கல்விக் கல்லூரியில் பதிவுசெய்துகொள்ள இருக்கும் தினம் தொடக்கம் 03 நாட்களுக்குள் பதிவுசெய்துகொள்ளாத பட்சத்தில் சேர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை அவர் இழக்கவேண்டி ஏற்படும். இதன் அடிப்படையில் ஏற்படக்கூடிய வெற்றிடம் திறமைத் தொடருக்கமைய நிரப்பப்படும். விண்ணப்பிக்கும் கல்விக் கல்லூரியில் வெற்றிடம் இல்லாத சந்தர்ப்பத்தில் உரிய பாடநெறிக்குரிய வெற்றிடம் கொண்ட ஏனைய கல்விக் கல்லூரிக்கு சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

6.5 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குப் பொருத்தமான உடல் உள தேகாரோக்கியம் கொண்டவர் என பரிசீலனை செய்வதற்காக கல்விக் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ள முன்னர் வைத்திய பரிசோதனைக்கு உட்பட வேண்டும்.

6.6 ஏதாவதொரு பாடநெறிக்கு/தேசிய கல்விக் கல்லூரிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் அப்பாடநெறி/தேசியக் கல்விக் கல்லூரியை மாற்றியமைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது. ஏதாவதொரு பாடநெறிக்கு போதியளவு மாணவர் எண்ணிக்கை இல்லாத சந்தர்ப்பத்தில் அண்மையில் உள்ள கல்விக் கல்லூரிக்குரிய பாடநெறியைத் தொடர மாற்றியமைக்கப்படும்.

6.7 ஏதாவதொரு பாடநெறிக்காக தேர்ந்தெடுக்கும்போது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே புள்ளியைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் தேர்ந்தெடுக்கவேண்டிய வெற்றிட எண்ணிக்கையைவிட அதிகமாக இருப்பின் உரிய விண்ணப்பதாரர்களின் முதற்தடவையாக க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குத் தோற்றிய பெறுபேற்றைக் கருத்திற்கொள்ளப்படும். விசேட திறமைச் சித்திக்கு 03 புள்ளிகளும், திறமைச் சித்திக்கு 02 புள்ளிகளும், சாதாரண சித்திக்கு 01 புள்ளி வீதமும் புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு உரிய வெற்றிட எண்ணிக்கை நிரப்பப்படும். இப்புள்ளிகள் வழங்கும் முறை பிரதானமாக 08 பாடங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது.

**7. பாடநெறிக்காக விண்ணப்பிக்க அல்லது சேர்வதற்கு தகைமையற்றவர்கள் :**

7.1 ஏற்கனவே அரச அல்லது தனியார் பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளவர்கள்

7.2 அரச பாடசாலையில் நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள்

7.3 தேசிய கல்விக் கல்லூரியில் பாடநெறியைத் தொடரும் அல்லது தொடர்ந்தவர்கள்

7.4 பல்கலைக்கழகம்/பல்கலைக்கழக நிறுவகம்/ஏனைய உயர்கல்வி நிறுவகம்/க. பொ. த. (உ. த.) தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளும் பாடநெறிக்கு பதிவுசெய்துள்ள/தொடரும் அல்லது பட்டப் பாடநெறியைத் தொடர்ந்து பூர்த்திசெய்துள்ளோர் ஒழுக்கச் செயற்பாடுகளின் அடிப்படையில் தேசியக் கல்விக் கல்லூரிகளிலிருந்து நீக்கப்பட்டவர்கள்.

*8. **பயிற்சிக்கான நிபந்தனைகள் :***

*8.1 பயிற்சிப் பாடநெறியின் காலஎல்லை 3 ஆண்டுகளாகும். இது தேசிய கல்விக் கல்லூரிகளில் 02 வருடங்கள் வதிவிடப் பயிற்சி பெற்றதன் பின்னர் பாடசாலைகளுக்கு இணைப்பு செய்து ஒரு வருடகாலம் சேவைக்காலப் பயிற்சியும் உள்ளடங்குகிறது. இரண்டாவது ஆண்டின் இறுதியில் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வெளிவாரி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக போதனாவியலாளர்களின் சமுகமளிப்பு 90% ஐ விடக் குறையாதிருக்க வேண்டும்.*

*8.2 சகல போதனாவியலாளர்களும் முதலாவது ஆண்டில் மற்றும் இரண்டாவது ஆண்டில் நடாத்தப்படும் உள்ளகப் பரீட்சைகளிலும் இரண்டாம் ஆண்டில் நடாத்தப்படும் உள்ளகப் பரீட்சைகளிலும் இரண்டாவது ஆண்டில் இறுதியாக நடாத்தப்படும் உள்ளகப் பரீட்சைகளிலும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இறுதி வெளிவாரிப் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும். அத்துடன் ஆங்கில மொழிமூல பாடநெறியைத் தொடரும் ஏனைய சகல பாடநெறிகளைத் தொடர்பவர்களும் மேற்கூறப்பட்ட பரீட்சைகளின் ஆங்கில மொழியில் சித்தியடைய வேண்டும். விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க வேண்டியது இந்நிபந்தனைகளுக்கு இணங்குபவர்கள் மாத்திரம் ஆகும்.*

*8.3 போதனாவியலாளர்கள் தங்கிப் பயிற்சி பெறும் 02 வருடங்களுக்குள் ஒரு வருடத்திற்கு 10 மாதங்களுக்காக மாதமொன்றிற்கு ரூ. 2,000 பெறுமதி கொண்ட உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். பயிற்சிக்கால அமர்வின்போது 10 மாதங்களுக்காக மாதமொன்றிற்கு 2,500 வீதமும் கொடுப்பனவு செலுத்தப்படும். சொந்தத் தேவைகளுக்கான செலவுகள் போதனாவியலாளர்களினால் மேற்கொள்ள வேண்டும்.*

*8.4 பயிற்சிபெறும் காலத்திற்குள் பயிற்சியாளர்கள் பல்கலைக்கழகம் பல்கலைக்கழக நிறுவகம் ஏனைய நிறுவனத்தின் உயர்தர தகைமைகளுடன் சேர்த்துக்கொள்ளப்படுவர். பாடநெறியில் உள்ளக மாணவராக கற்கைப் பாடநெறியைத் தொடர எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்பட மாட்டாது. அவ்வாறு பாடநெறிகளில் கலந்துகொள்வதாக உறுதிசெய்யப்படும் பட்சத்தில் பயிற்சியாளர்களுக்காக உறப்படும் முழு பிணைத்தொகையும் மீளஅறவிடப்பட்டு பாடநெறியிலிருந்து நீக்கப்படுவர்.*

*8.5 பயிற்சிபெறும் கால எல்லையில் போதனாவியலாளர்கள் திருமணமாகும் பட்சத்தில் மாணவர் என்ற அந்தஸ்து இரத்தாகிறது.*

*8.6 பயிற்சிக் காலத்திற்குள் எதிர்பார்க்கப்பட்ட பழக்கவழக்கங்கள் உட்பட ஆர்வம் மற்றும் கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றங்களைக் காண்பிக்காத போதனாவியலாளர்கள் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர். அத்துடன் கலைப்பயிற்சியின் முதலாவது ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்போது திருப்திகரமான மட்டத்தை அடையத்தவறும் அல்லது 8.4 வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறியைத் தொடர்வதாக உறுதிசெய்யப்படும் பட்சத்தில் பாடநெறியிலிருந்து நீக்கப்படும். இது தொடர்பாக கல்வி அமைச்சின் கல்வியியல் நிறுவக சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.*

*8.7 பயிற்சிபெறும் கால எல்லைக்குள் போதனாவியலாளர்களின் உடல் உள பொருத்தம் தொடர்பாக பீடாதிபதி அல்லது தொழிற்பயிற்சிக் கால எல்லைக்குள் அதிபரின் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் மீண்டும் விசேட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படும். இதன் அறிக்கை கல்வியியல் கல்லூரி நிறுவக சபைக்கு சமர்ப்பித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.*

*8.8 பயிற்சிக்காக உரிய மூன்றாண்டுகால எல்லையை பூரணப்படுத்த முன்னர் பயிற்சியைக் கைவிடும் பட்சத்தில் பயிற்சிக்காக கல்வி அமைச்சினால் செலுத்தப்படும் முழு பிணைத்தொகையையும் மீண்டும் செலுத்தும் வகையில் போதனாவியலாளர்கள் கல்வி அமைச்சுடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்.*

*8.9 பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யும் போதனாவியலாளர்களுக்கு தேசிய போதனாவியல் டிப்ளோமா வழங்கப்படும். பாடநெறி சார்ந்த பணிகள் மற்றும் ஆளுமை விருத்தி (கட்டாயமாக பங்கேற்கவேண்டிய பாட இணை செயற்பாடுகள் உட்பட) பயிற்சிக் காலத்திற்குள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுவதுடன் இம்மதிப்பீடு தேசிய போதனாவியல் டிப்ளோமா வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் இறுதி மதிப்பீட்டுப் பிரிவாகும்.*

*8.10 இப்பாடநெறியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் கஷ்ட மாவட்டங்களின் கல்வி வலய மட்டத்தில் ஏற்படக்கூடிய வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்ட ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்காக கருத்திற்கொள்ளப்படும்.*

*8.10.1 எதிர்காலத்தில் அரச பாடசாலைகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும்போது இப்பயிற்சிப் பாடநெறியை பூர்த்திசெய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். எனவே பாடநெறிக்காகத் தேர்ந்தெடுக்கும் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கும் விண்ணப்பதாரர்கள் மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கும் பட்சத்தில் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.*

*8.10.2 மேற்கூறப்பட்ட நிபந்தனையின்கீழ் பயிற்சிபெறும் விண்ணப்பதாரர்கள் தாம் நியமனம் பெறும் கஷ்ட மாவட்டத்தில்/ கல்வி வலயத்தில் குறைந்தபட்சம் நியமனத் தினம் தொடக்கம் 05 வருடங்கள் (05) கல்வி அமைச்சின்கீழ் சேவையாற்றுவதற்காக கல்வி அமைச்சின் செயலாளருடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். நியமனம் வழங்கப்படும் கல்வி வலயம் எக்காரணம் கொண்டும் மாற்றியமைக்கப்பட மாட்டாது.*

8.11 தேசிய கல்வியியல் கல்லூரியில் பதிவாகும் விண்ணப்பதாரர்களுக்கு பயிற்சிக்குச் செலவாகும் நிதி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக ரூ. 500,000 முறி ஒப்பமிட வேண்டும். பாடநெறியை இடைநடுவில் நிறுத்திவிட்டு அல்லது பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததன் பின்னர் 05 வருடங்கள் அரச சேவையில் இருக்காதவர் இம்முறியின் முழுமையான நிதியை அரசிற்குச் செலுத்தும் நிபந்தனைக்கு உட்பட வேண்டும்.

8.12 சகல கல்வி மற்றும் ஏனைய வசதிகள் விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்த வேண்டும்.

9. **விண்ணப்பித்தல் :**

9.1 விண்ணப்பதாரர் ஒருவர் உயர்ந்தபட்சம் 03 பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

9.2 ஒரு விண்ணப்பதாரரினால் ஒரு விண்ணப்பப்படிவம் மற்றும் அதில் உறுதிசெய்யப்பட்ட இரண்டு (02) போட்டோப் பிரதிகளை மாத்திரம் ஒரு அட்டையிலிருந்து சமர்ப்பிக்க வேண்டும். ஒரு விண்ணப்பதாரரினால் மேற்கூறப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் உறுதிசெய்யப்பட்ட 02 போட்டோப் பிரதிகளைத் தவிர ஏனைய விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்திருப்பின் சகல விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

9.3 விண்ணப்பப்படிவம் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆலோசனைகள் மற்றும் மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்க வேண்டும்.

9.4 விண்ணப்பப்படிவம் 2008.10.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பிரதம ஆணையாளர் (ஆசிரிய கல்வி), கல்விக் கல்லூரிக் கிளை, கல்வி அமைச்சு, 'இசுருபாய', பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2009 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கல்லூரிக்கு சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்".

முதலாவது விருப்பத்தைக் குறித்துக்காட்டும் பாடநெறி ...................................... மற்றும் இலக்கம் ...............................

ஆகிய விடயங்கள் தொடர்பாக தகவல்களை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். (பரீட்சைத் திணைக்களத்திற்கு அல்லது தேசிய கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பப்படிவங்களை அனுப்பக்கூடாதென வலியுறுத்துகிறேன்.)

9.5 கல்விக் கல்லூரிக்கு சேர்த்துக்கொள்வது தொடர்பாக விளக்கங்கள் அல்லது மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் விண்ணப்பப்படிவம் அனுப்பிய பதிவுத்தபால் பற்றுச்சீட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டும். இதனால் அவற்றை விண்ணப்பதாரர் வைத்துக்கொள்ள வேண்டும்.

9.6 பரீட்சை இலக்கம், வருடம், பாடநெறி இலக்கத்தை சரியாகக் குறிப்பிடாத விண்ணப்பப்படிவங்களும் முறையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

9.7 விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது.

9.8 விண்ணப்பப்படிவத்திற்கு வேறெந்தவொரு ஆவணத்தையும் இணைத்து அனுப்பக் கூடாது.

9.9 விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ் மோசடி செய்யப்பட்ட சான்றிதழ் என பின்னர் தெரியவருமிடத்து விண்ணப்பதாரி சேவையிலிருந்து நீக்கப்படுவதுடன் அரச சேவையில் எந்தவொரு நியமனத்தையும் பெற்றுக்கொள்ள தகைமையற்றவர் ஆவார்.

10. வர்த்தமானி அறிவித்தலில் மேற்கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எழும் பிரச்சினைகள் தொடர்பாக கல்வியியலாளர் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

11. வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலமான பாடநெறிகளுக்கிடையே ஏதாவதொரு தொடர்பின்மை தெரியவரும் பட்சத்தில் சிங்கள மொழியே உயர்ந்து நிற்கும்.

எம். எம். என். டீ. பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை,
2008.09.25.

**விண்ணப்பப்படிவங்களை தயாரிப்பதற்கான ஆலோசனை**

1. வர்த்தமானி அறிவித்தலை பல தடவைகள் கவனமாக வாசிக்கவும். தங்களுக்கு தகைமை கொண்ட 03 பாடநெறிகளுக்கு ஒரு விண்ணப்பப்படிவம் ஊடாக மாத்திரம் விண்ணப்பிக்கவும். இவ்விண்ணப்பப்படிவம் மற்றும் உறுதிசெய்யப்பட்ட 02 போட்டோப் பிரதிகளை மாத்திரம் ஒரே கடித உறையில் இட்டு அனுப்பவும். (பாடசாலை விண்ணப்பதாரர்கள் அதிபர் ஊடாகவும் தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் சமாதான நீதவான் ஊடாகவும் 2 போட்டோப் பிரதிகளை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

2. கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரிப்படிவத்திற்கமைய ஏ4 அளவில் (சென்ரிமீற்றர் 21 X 29.7) வெள்ளைநிறக் கடதாசியில் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கவும். 1.0-9.3 வரை முதலாவது பக்கத்தில் உள்ளடங்கக்கூடியவாறு தயாரிக்கவும். கூட்டினுள் தகவல்களைக் குறிப்பிட வேண்டிய சந்தர்ப்பங்களில் உரிய கூட்டினுள் "X" இடுக.

3. விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதற்காக அவ்வவ் பாடநெறிக்காக கல்வி அமைச்சினால் தயாரிக்கப்படும் கணனி பெயர்ப்பட்டியலை தயாரிக்கும் பட்சத்தில் முதற்பக்கத்தில் 1.0-9.3 வரையான தகவல்களை உள்ளடக்க வேண்டுமென தயவாய் கருத்திற்கொள்ளவும். விசேடமாக பாடநெறி இலக்கம் க. பொ. த. (உ. த.) பரீட்சை இலக்கம் "Z" பெறுமதியை சரியானது என உறுதிசெய்யவும். ஓர் இலக்கத்திற்கு மேலால் வேறு இலக்கத்தை எழுதுதல் அல்லது தெளிவற்ற விதத்தில் குறிப்பிடுதல் பிழையான தகவல்கள் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் தயவாய்க் கருத்திற்கொள்ளவும்.

4. உடற்கல்வி பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 12.0 வாசகத்திலும், தொழில்நுட்பக் கற்றைக்காக விண்ணப்பப்படிவத்தின் 13.0 வாசகத்திலும், மேற்கத்திய சங்கீதத்திற்காக 14.0 வாசகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் கருத்திற்கொள்ளப்படும். இதனால் அதனை சரியாக நிரப்ப வேண்டும். இவற்றைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது.

5. **மாவட்டங்களுக்குரிய இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 01 | அம்பாந்தோட்டை | 09 | அம்பாறை | 17 |
| கம்பஹா | 02 | யாழ்ப்பாணம் | 10 | புத்தளம் | 18 |
| களுத்துறை | 03 | கிளிநொச்சி | 11 | குருணாகல் | 19 |
| மாத்தளை | 04 | மன்னார் | 12 | அனுராதபுரம் | 20 |
| கண்டி | 05 | முல்லைத்தீவு | 13 | பொலன்றுவை | 21 |
| நுவரெலியா | 06 | வவுனியா | 14 | பதுளை | 22 |
| காலி | 07 | திருகோணமலை | 15 | மொனராகலை | 23 |
| மாத்தறை | 08 | மட்டக்களப்பு | 16 | கேகாலை | 24 |
| | | | | இரத்தினபுரி | 25 |

6. மொழிக்காக உரிய குறியீட்டைக் குறிப்பிடுக :
சிங்களம் - S, தமிழ் - T, ஆங்கிலம் - E

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

ஆசிரிய கல்வி தொடர்பான ஆரம்ப சேவை தொழில் பாடநெறியை தொடர்வதற்காக தேசியக் கல்விக் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ளல் - 2009

(அலுவலகப் பயன்பாட்டிற்காக)

(விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பப்படிவம் மற்றும் அதில் உறுதிசெய்யப்பட்ட 02 போட்டோப் பிரதிகளை மாத்திரம் ஒரே கடித உறையில் இட்டு அனுப்பவேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் 9 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை முதலாவது பக்கத்தில் உள்ளடக்கவும். தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்காக கணனிப் பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பது 1.0 – 9.3 வரையான தகவல்கள் மூலம்)

1.0

| விருப்பத் தொடர் | பாடநெறியின் இலக்கம் | மொழி S/ T/ E |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

2.0 2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் ஆங்கிலத்தில் (In Block Letters) உ-ம் : MR. PERERA R. C :
Mr./ Miss :----.

2.2 முழுப்பெயர் ஆங்கிலத்தில் (In Block Letters) :----.

3.0 நிரந்தர வதிவிட முகவரி :
ஆங்கிலத்தில் (In Block Letters) :----.

4.0 தமிழ்மொழி மூல வர்த்தமான அறிவித்தலில் 5.2.4 பந்திக்கமைய-

மாவட்டம் :----. மாவட்ட இலக்கம் : ☐

5.0 5.1 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

5.2 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

6.0 பால் (ஆண்/பெண்) : ஆண் [1] பெண் [2]

7.0 இன வகை :

| சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்திய தமிழர் | முஸ்லிம் | ஏனையவை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |

8.0 2007 ஆம் ஆண்டின் க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :

8.1 ஆண்டு : ☐☐☐☐

8.2 பரீட்சை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐

8.3 Z பெறுமதி : ☐ . ☐☐☐☐

8.4 பெறுபேறு விபரம், பாடங்களுக்கமைய-

| | பாடம் | பாட இல. | பெற்ற தரம் |
|---|---|---|---|
| 1. | ................................ | ............................ | ............................ |
| 2. | ................................ | ............................ | ............................ |
| 3. | ................................ | ............................ | ............................ |

9.0 9.1 ஆங்கிலம் மற்றும் ஆங்கில மொழி பாடநெறிகளின் விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு அல்லது ஆங்கில இலக்கியத்திற்குக் கிடைத்த உயர்தரம் :----.

வருடம் : ☐☐☐☐

சுட்டிலக்கம் : ☐☐☐☐☐☐☐☐

9.2 ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பிப்பவர்கள் தாம் தோட்ட ஊழியரின் பிள்ளையா என்பதனை குறித்து (உரிய கூட்டினுள் X இடுக)

ஆம் [1] இல்லை [2]

9.3 உடற்கல்வி சிங்களம்/தமிழ் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தில் 12.0 பிரிவுக்காக உள்ளடக்கப்படும் புள்ளிகளின் மொத்தம் ☐

10.0 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் தாங்கள் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் தாங்கள் தோற்றியது ஒரு பாடத்திற்காயின் ஒவ்வொரு தவணைகளினதும் முழுமையான விபரங்களைக் குறிப்பிடுக.

| | | 1 | 2 |
|---|---|---|---|
| 10.1 | பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் | ............................ | ............................ |
| 10.2 | ஆண்டு | ........................... | ........................... |
| 10.3 | பரீட்சை இலக்கம் | ........................... | ........................... |
| 10.4 | பரீட்சை மத்திய நிலையத்தின் இல. | ........................... | ........................... |
| 10.5 | Z புள்ளிகள் | | |

10.6 சித்தி எய்திய பாடங்கள் மற்றும் தரம் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| ........................... | ........................... | ........................... | ........................... |
| ........................... | ........................... | ........................... | ........................... |
| ........................... | ........................... | ........................... | ........................... |
| ........................... | ........................... | ........................... | ........................... |

11.0 ....................................................... சித்தியடைந்த க. பொ. த. (சா. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

| | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| 11.1 பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் | ........................... | ........................... | ........................... |
| 11.2 ஆண்டு | ........................... | ........................... | ........................... |
| 11.3 பரீட்சை இலக்கம் | ........................... | ........................... | ........................... |
| 11.4 பரீட்சை மத்திய நிலையத்தின் இல. | ........................... | ........................... | ........................... |

11.5 சித்தி எய்திய பாடங்கள் மற்றும் தரம் :

| | (தவணை 1) | | (தவணை 2) | | (தவணை 3) | |
|---|---|---|---|---|---|---|
| | பாடம் | தரம் | பாடம் | தரம் | பாடம் | தரம் |
| 1. | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... |
| 2. | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... |
| 3. | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... |
| 4. | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... |
| 5. | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... |
| 6. | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... |
| 7. | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... |
| 8. | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... | ........................... |

12.0 வர்த்தமானி அறிவித்தலில் 4.4 வாசகத்தின் 4.4.3 மற்றும் 4.4.4 பிரிவுக்கமைய விளையாட்டுத் திறமை தொடர்பான விபரங்கள் (உடற்கல்விப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் மாத்திரம் நிரப்பவேண்டும்.) இப்பிரிவைப் பூரணப்படுத்தும்போது 4.4.3 இலுள்ள சகல பிரிவுகள் தொடர்பாகவும் தாங்கள் கவனம் செலுத்தவேண்டும். தாங்கள் பெற்றுள்ள உயரிய விளையாட்டுச் சான்றிதழ் 03/ திறமைகளின் தகவல்களை மாத்திரம் சமர்ப்பிப்பது போதுமானதாகும். தாங்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சுகாதாரம் மற்றும் உடற்கல்விப் பாடத்திற்குத் தோற்றி சித்தி பெற்றிருப்பின் 4.4.4 இற்கமைய தரத்திற்குரிய புள்ளியும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் முதலாவது பக்கத்தில் 9.3 இல் உள்ளடக்க வேண்டும்.

| தொடர்பு இல. | ஆண்டு | வழங்கிய அமைச்சு/ நிறுவகம்/சங்கம் | போட்டியை பிரதிநிதித்துவப் படுத்திய மட்டம் சர்வதேசம்/ தேசிய/மாகாண/மாவட்ட/வலய | நிகழ்ச்சி/ போட்டி | பெற்ற இடம் | 4.4.3 இற்குரிய புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| க. பொ. த. (சா. த.) சுகாதார மற்றும் உடற்கல்விப் பாடத்திற்குப் பெற்ற தரம் | | | | | புள்ளிகள் | |
| | | | | மொத்தப் புள்ளி | | |

13. வர்த்தமானி அறிவித்தலின் 4.6.3 வாசகத்தின் தொழில்நுட்பக் கற்கைப் பாடநெறிக்கமைய உள்ளடக்க எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரர்கள் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கலைப் பாடநெறியொன்றைத் தொடர்ந்து பூர்த்திசெய்திருப்பின் கீழ்க்குறிப்பிடப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்த வேண்டும்.

| கலைப் பாடநெறியின் பெயர் | அரச பதிவு இலக்கம் மற்றும் செல்லுபடியாகும் தினம் | நடாத்தப்பட்ட நிறுவகம் | கால எல்லை | பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்யப் பட்டுள்ளதா ? |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

14.0 வர்த்தமானி அறிவித்தலில் 4.7.1, 4.7.2 வாசகங்களுக்கமைய மேற்கத்தைய சங்கீதப் பாடநெறிக்கான விண்ணப்பதாரர்கள் சங்கீதம் தொடர்பான திறனுக்குரிய தகவல்களை உள்ளடக்க வேண்டும்.

| ஆண்டு | சான்றிதழ் வழங்கிய நிறுவகம் | திறன்/சித்தியடைந்த வகுப்பு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

15.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(i) என்னால் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது ஒரு விண்ணப்பப்படிவம் மற்றும் உறுதிசெய்யப்பட்ட போட்டோப் பிரதி ஆகிய 02 மாத்திரம் ஆகும். ஒரு விண்ணப்பப்படிவம் மற்றும் அதன் போட்டோப் பிரதிகள் இரண்டைவிட அதிகமாக சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் எனது சகல விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும் என்பதனை நான் அறிந்துள்ளேன். விண்ணப்பிக்கும் கல்விக் கல்லூரியில் வெற்றிடம் இல்லாத சந்தர்ப்பத்தில் உரிய பாடநெறி நடைபெறும் வெற்றிடம் கொண்ட ஏனைய கல்விக் கல்லூரியில் சேர்ந்துகொள்ள விருப்பம் தெரிவிக்கிறேன்.

(ii) என்னால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானதும் உண்மையானதும் என உறுதிசெய்கிறேன். என்னால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் உண்மைக்குப் புறம்பானதென தெரியவரும் பட்சத்தில் நான் தேர்ந்தெடுக்க தகைமையற்றவர் என்றும் தேர்ந்தெடுத்ததன் பின்னர் பிழையான தகவல்கள் தெரியவரும் பட்சத்தில் எனது தெரிவை இரத்துச்செய்ய முடியும் என்பதனையும் நான் அறிந்துள்ளேன்.

(iii) நான் பல்கலைக்கழக பிரவேசத்திற்கு விண்ணப்பிக்கவில்லை என்பதுடன் பல்கலைக்கழகம்/பல்கலைக்கழக நிறுவகம்/ஏனைய உயர்கல்வி நிறுவகத்தில் பதிவுசெய்யவில்லை என்றும் பாடநெறியைத் தொடரவில்லையென்றும் இத்தால் உறுதிசெய்கிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

16.0 **பாடசாலை/பிரிவெனா பரீட்சார்த்திகள் தொடர்பில் அதிபர்/பிரிவெனா பொறுப்பாளரின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பதாரி இப்பாடசாலையின் பிரிவெனா மாணவராக க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்கு தோற்றியதாகவும் விண்ணப்பதாரியினால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் சரியானது என்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள பெறுபேறு குறிப்பிற்கமைய ............................ ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையின் விண்ணப்பதாரி பெற்றுள்ள இதன் பெறுமதி .................................. (எழுத்தில்) ........................................................... என்றும் உறுதிசெய்கிறேன்.

----,
அதிபர்/பிரிவெனா தலைவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

அதிபர்/பிரிவெனா பொறுப்புத் தேரரின் பெயர் :----.
பாடசாலை/பிரிவெனாவின் பெயர் மற்றும் முகவரி :----.
திகதி :----.

17.0 **தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தொடர்பான உறுதியுரை :**

பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ பெறுபேற்றுக் குறிப்பிற்கமைய ................................ ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் நான் பெற்ற மொத்தப் புள்ளி/ "Z" புள்ளி ................................ (எழுத்தில்) ........................................................... என உறுதிசெய்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

----,
சமாதான நீதவானின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

10-350

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.